Registered No. M-4345.

# யுத்த சஞ்சிகை

மலர் I.] 1941-ம் ஆண்டு டிசம்பர்மீ 12உ, வெள்ளிக்கிழமை. [இதழ் 39

## ஜப்பான் எலி

'நானும் நீயும், இனிமேலே என்னிக்கும் ஒண்ணு! நமக்குள்ளே இனிமேலே வித்யாசமே இருக்கப்படாது. எனக்குவர்ர கஷ்ட நஷ்டங்கள் உனக்கும் உண்டு; உன்னோட துக்க சுகத்திலே எனக்கும் பங்குண்டு. சரிதானே? அப்படின்னு இந்தக் கயிறிலே ஒரு நுனியை உன் காலிலே கட்டிக் கோ! இன்னொரு நுனியை என் காலிலே கட்டிக் கிறேன். பேஷ்! இனிமேலே எந்தப்பயல் வேணுமானாலும் வரட்டும்! நமக்கென்ன பயம்? வா ஜோராகக் குதித்து விளையாடலாம்' என்று ஒரு தவளை அழைக்க, அதற்கிசைந்த ஒரு எலி தன் கால் கட்டோடு உத்சாகமாகக் குதித்துவிளையாட ஆரம்பித்தது. கொஞ்சநேரம் எல்லாம் தமாஷாகத் தானிருந்தது. திடீரென்று ஒரு பெரிய நிழல் பூமிமேலே பாய்ந்து சென்றது. தவளையும் எலியும் திடுக்கிட்டு, ஆகாயத்தைப் பார்த்தன. அங்கே ஒரு பெரிய பருந்து வட்டமிட்டுக்கொண்டிருந்தது. 'ஐயோ கடவுளே!' என்று தவளை தன் உயிரைக் காத்துக்கொள்ள, ஜலத்தில் 'தொப்' என்று குதித்து ஆழமான இடத்திற்கு வேகமாக நீந்திப்போயிற்று.

பாவம்! எலிபாடுதான் திண்டாட்டமாகிவிட்டது. மூச்சுத் திணற, 'ஐயோ! அப்பா!' என்று அலற ஆரம்பித்தது. கால்கட்டு இருந்த காரணமாக, தவளை போகிற இடமெல்லாம் எலியும் போயாகவேண்டிவந்தது. தவளைக்குத் தண்ணீர் என்றால் கொம்மாளம். ஆனால் எலிக்கு? 'மடக், மடக்' என்று ஜலத்தைக்குடிக்க, வயிறு 'புஸ்' என்று பெருத்துக்கொண்டுவந்தது. கண்கள் பிதுங்கின.

அந்த எலியின் கதிக்கும், இந்த ஜப்பான் எனும் தேசத்தின் கதிக்கும் அதிக வித்தியாசம் ஒன்றுமில்லை. ஜெர்மனியோடு ஜப்பான் ஒரு ஒப்பந்தம் செய்துகொண்டது. அதன்படி, ஜெர்மனிக்கு விரோதி தனக்கும் விரோதி என்று அதுபாவிக்க வேண்டிவந்தது. தன்னுடைய நிலைமை என்ன, தன் கூட்டாளியின் நிலைமை என்ன, தனக்கும் அந்தக் கூட்டாளிக்கும் சரிப்படுமா என்பதையெல்லாம் இந்த ஜப்பான் எலி கவனிக்கவேயில்லை. ஒரு குஷியிலே தன்னை ஜெர்மனியோடு பிணைத்துக் கொண்டுவிட்டது. அதனுடைய சுகம் இப்பொழுது தான் தெரியப்போகிறது அதற்கு?

ஜெர்மனி பிரமாதமாக, ஒருபுறம் யுத்தகளத்திலே இறங்கி, சண்டைபோட்டுக்கொண்டிருக்கிறது. அதோடே சேர்ந்த ஜப்பானும் எத்தனைநாள்தான் சும்மா இருக்கமுடியும்? அதுவும் இப்பொழுது தனது சக்திக்கு மிஞ்சிய ஆழத்திற்கு வந்துவிட்டது.

இத்தனை காலமாக, ஜப்பான் பெரிய எலி மாதிரியே வேலைசெய்துகொண்டிருந்தது. யாருடாப்பா அசந்து மறந்து இருக்கப்போறாங்க, மெள்ளப்போய் கிடைத்ததைக் கவ்விக்கொண்டு வரலாம் என்று அது பார்த்துக்கொண்டிருந்தது.

மூடிக்கிடக்கிற கடைக்குள்ளே புகுந்த எலிமாதிரி முதல்லே, ஜப்பான் சீனாவிலே, வடக்கே மஞ்சூரியான்னு இருக்கிற பிரதேசத்தைக் கறுவித் தள்ளிவிட்டது. அப்புறம் பெரிய கட்டையாக இருந்தால் தேவலை என்று எண்ணி, சீனாமேலேயே பல்லை வைத்தது. பாவம்! சீனா உண்மையிலே ஒரு இரும்புத்துண்டு; மேலேதான் கொஞ்சம் மரம் போட்டு மூடினாப்போலே இருக்கு என்கிறது அதுக்குத் தெரியலை. கொஞ்சம் கறுவிற்று. மரத்தூள் உதிர்ந்தது. சீனாவில் சில பாகங்கள் அதற்குக் கிடைத்தன. அதற்கு சந்தோஷம் பொறுக்கமுடியவில்லை. மேலேமேலே தன் வேலையைக் காட்ட ஆரம்பித்தது. திடீர்னு அதற்கு ஒருபல் உடைஞ்சி போச்சு. அப்படியும் சீனாக் கட்டையை அது விடவில்லை.

இந்தக் கொள்ளையிலே, ஜப்பான் கொஞ்சம் தெற்கேயும்போய், அங்கேயும் ரகசியமாகக் கறுவல் வேலையை ஆரம்பித்தது. அதுதான் இந்தோ சைனா என்கிற பிரஞ்சுக்காரர் பிரதேசத்திலே ஜப்பான் வந்து இறங்கின கதை.

இது மூடின கடை இல்லை. 'சூ! சூ!' என்று யாராவது ஒருவர் விரட்டிக்கொண்டே இருந்தார்கள் அதை. பிரிட்டன், அமெரிக்கா ஆகிய நாடுகள் எல்லாம் ஜப்பானை ஆயிரம் கேள்விகள் கேட்டு, 'இந்தோ சீனாவில் உனக்கென்ன வேலை? நீ செய்கிறது ஒண்ணும் சரியாயில்லையே தம்பி' அப்படின்னு விரட்ட ஆரம்பித்தன.

'ஒண்ணுமில்லை ஐயா, நீங்க ஒருபுறம்! இந்தச் சீனா ரொமப வாலாட்டுகிறது. அது என்னுடைய பல்லை உடைத்துவிட்டது. அதை விடுவேனா நான்? உண்டு இல்லைன்னு அதை ஒரு கைபார்த்துட்டுத் தான் விடுவேன். அதை இந்தப் பக்கத்திலேருந்து கறுவத்தான் நான் இங்கே வந்திருக்கிறேன். எனக்கு இங்கே என்ன வேறே வேலை? என் வேலை ஆச்சுன்னா நான் போகப்போறேன்' என்று சொல்லிக்கொண்டே, இந்தோ சீனாவில் ஏராளமான துருப்புகளைக் கொண்டுவந்து இறக்கிற்று அந்த ஜப்பான். அவ்வாறு அதுவந்து இறங்க, அதற்கு இந்தோ சீனாவின் சொந்தக்காரரான பிரஞ்சு விஷி சர்க்காரும் இடம்கொடுத்து விட்டார்கள்.

ஆனால் ஜப்பான் இவ்வாறு படைகளைக்கொண்டு வந்து இந்தோ சீனாவில் இறக்கினது, சீனாவைத் தாக்கும் நோக்கத்தோடே மட்டுமில்லை என்பது தெருவிலே போகிற கிழவிக்குக்கூடத்தெரியுமே! 'கீழ்நாட்டுக்கு நான்தான் எசமான், இங்கே யார் தும்பனுமானாலும்சரி, இரும்பனுமானாலும்சரி எங்கிட்டேதான் கேக்கணும்' அப்படின்னு ஜப்பான் சொல்லிக்கொண்டேயிருக்கு கொஞ்ச காலமாக. எலி, வீட்டைக் கொட்டைபரப்புகிறது; இவ்வாறு விட்டால் வீட்டிற்கே ஆபத்து என்று தெரிஞ்ச பிறகும், யாராவது சும்மா இருப்பாளா? எலிப்பொறியை வாங்கி வைத்தோ, நாயும் பூனையும் வளர்த்தோ எலிகளை, துரத்தப்பார்க்கமாட்டாளா? அதேமாதிரி, ஜப்பானின் குணத்தை நன்றாக அறிந்தவர்கள், அதைத் தலையில் தட்டாமல் இருக்கமுடியுமா?

ஜப்பானின் குணம் எப்படி என்று தெரியவேணுமானால், அதனுடைய பழங்கதையைக் கொஞ்சம் நினைவுபடுத்திப் பார்த்துவிட்டால் போதும். 1905-ம் வருஷத்திலே ஜப்பானுக்கும் ரஷ்யாவுக்கும் சமுத்திரத்திலே ஒரு சண்டை நடந்தது. அந்தச் சண்டையிலே ஜப்பான் ஜெயித்துவிட்டது. உடனே அதற்கு மண்டைக்கர்வம் அதிகமாகிவிட்டது, 'டேய்! இனிமேலே நம்மை எவனும் ஒண்ணும் செய்யமுடியாதுடா! நம்மசக்தி நமக்கே இத்தனைகாலமாத் தெரியாமல்போச்சுடா? இவ்வளவு சக்தி உள்ள நாம், இனிமேல் சும்மா இருக்கப்படாது. நமது சிறு ராஜ்யத்தைப் பெரிய சாம்ராஜ்யமாக்கிவிட வேண்டும்' என்ற யோசனை அதற்கு உண்டாச்சு.

அதுக்கப்பாலே, 1931-ம் வருஷத்திலே மஞ்சுகோவிலே ஜெயம்கிடைச்சதா? அப்பொழுது முதலே அதற்குத்தலைகால் தெரியவில்லை 'பஸிபிக் மகா சமுத்திரத்திற்கு நாமே ராஜாவாகவேண்டும்' என்று நினைக்க ஆரம்பித்தது. பஸிபிக் மகா சமுத்திரம் என்கிறது அமெரிக்காவின் மேல்கரைக்கும், ஜப்பானுக்கும் மத்தியில் உள்ள பிரமாண்டமான

சமுத்திரம். இந்த சமுத்திரத்துக்கு மத்தியிலே, எத்தனையோ தீவுகள் இருக்கின்றன. அதிலே, ஜப்பானுக்கும் பல தீவுகள் இருக்கிறது. அந்தத் தீவுகளுக்கெல்லாம் பக்கத்திலே. பக்கத்திலே அமெரிக்காவிற்குச் சொந்தமான தீவுகளும் இருக்கின்றன.

அதனாலே ஜப்பான் சட்டென்று ஒண்ணும் செய்ய முடியலை. நாசூக்காக, அது வேலை செய்துகொண்டு வந்தது. ஜப்பானோட குணம் தெரிந்த அமெரிக்காவும் சாமர்த்தியமாக ஜப்பானோடு ஒரு ஒப்பந்தம் செய்துகொண்டது. அதன் பிரகாரம் ஜப்பான் எத்தனை கப்பல்கள் வைத்துக்கொள்றது, அமெரிக்கா எத்தனை வைத்துக்கொள்றது என்று கணக்குப்போட்டுக் கொண்டார்கள். ஆனால், ஜப்பான் ரொம்ப காலம் அந்த ஒப்பந்தப்படி நடக்கவில்லை. அதை உதறித்தள்ளிவிட்டு ரொம்ப ரகசியமாக, கப்பல் படையை ஜாஸ்தியாக்க ஆரம்பித்துவிட்டது.

‘பல ஆயிர மைல்களுக்கு அப்பாலே உள்ள நமக்கு ஆபத்து ஒண்ணுமில்லை’ என்று அமெரிக்காவும் அசிரத்தையாக இருந்துவிட்டது. இது ஜப்பானுக்கு சௌகரியமாகப் போய்விட்டது. நாளடைவிலே அது பிரமாதமாக வாலை ஆட்ட ஆரம்பித்துவிட்டது. அதன் மனசிலே சாம்ராஜ்யப் பைத்தியமும் அசாத்யமாகிவிட்டது. பைத்தியம்பிடிச்ச குரங்கு, ஒரு மொந்தை கள்ளையும் உள்ளே தள்ளிக்கொண்டது என்றால் எப்படியிருக்கும்? அதுமாதிரி, ஜப்பான் ஜெர்மனியுடன் சேர்ந்துகொண்டுவிட்டது. அசல் குரங்குமாதிரியே ஜெர்மனி செய்கிறதுபோலவே தானும் செய்ய ஆரம்பிச்சது. முன் எச்சரிக்கை இல்லாமல் ஒரு நாட்டைத் தாக்குவது, நிஜக்கலப்பில்லாமலேயே பேசறது ஆகிய குணங்களெல்லாம் அதுக்குப் பாடமாச்சு.

இந்தக்கொள்ளையிலே ஜெர்மனியின் கை, கொஞ்சம் எங்கிக்கொண்டே வந்ததா? ஜப்பானுக்கு ஒண்ணுமேபுரியலை. ஆனால், பிரிட்டன் சாதாரண நாடா என்ன? அதோடு, அமெரிக்காவும் பகிரங்கமாக பிரிட்டனுக்கும், ருஷியாவுக்கும், சீனாவுக்கும், லிபியாவிற்கும் ஏராளமான உதவியைச் செய்ய ஆரம்பித்துவிட்டதா? ஜெர்மனிக்கே கொஞ்சம் உகரல் எடுத்துவிட்டதுபோலிருக்கிறது. எதுடா இது, கிணறு வெட்டப்பூதம் புறப்பட்ட கதையாக ஆயிடுத்தே என்று திகிலடைந்து விட்டாப்பலே இருக்கிறது. ருஷியாவோ முரட்டுக் கரடியாக மாறிவிட்டது. லேசிலே இடங்கொடுக்கமாட்டேன் என்கிறது அது.

இந்த சமயத்திலே வடக்கு ஆப்ரிகாவிலே வேறே பிரிட்டிஷ் படைகள் ஜமாய்த்துத் தள்ள ஆரம்பித்துவிட்டன. அமெரிக்க விமானங்கள், டாங்கிகள் எல்லாம் ஆபிரிக்காவிலே வந்து இறங்கிவிட்டன. இப்படியே விட்டுக்கொண்டிருந்தால் நம்மபாடு ஆபத்து என்று தோன்றியிருக்கும் ஜெர்மனிக்கு.

அமெரிக்காவையும் சண்டைக்கு இழுத்துவிட்டுவிடவேண்டும்; அப்பொழுது அமெரிக்க உதவி மற்ற நாடுகளுக்குக் கிடைப்பது குறையலாம்; நாம் கொஞ்சம் மூச்சு விடலாம் என்று நினைத்ததோ என்னமோ? ஜப்பானுக்கு ‘ஸ்க்ரூ’ கொடுக்க ஆரம்பித்துவிட்டது. தன்னாலான உதவியை ஜப்பான் என்றும் ஒப்பந்தப்படி ஜெர்மனிக்கு செய்தாகவேண்டுமோ இல்லையோ? அதேமாதிரி ஜெர்மனியும் ஜப்பானுக்கு உதவணும்? ஆனால் ஜெர்மனி வந்து என்ன உதவப்போகிறது ஜப்பானுக்கு?

பேய்க்கு வாழ்க்கைப்பட்ட பெண்டாட்டிபோலே, புளியமரத்திலேயும் ஏறவேண்டி வந்துவிட்டது ஜப்பானுக்கு. ஜெர்மனி இடிக்கிற இடி பொறுக்க முடியலை போலிருக்கு. பிரிட்டிஷ்காரர்களுடன் சேர்ந்தடலாம்னால், ‘சீனாவை விட்டு வெளியே ஏறு’ என்கிறார்கள். அதற்கும் மனசு இல்லை.

குட்டிக் குரங்கு என்ன செய்யும்னா, இளநீர்க்குள்ளே கையைவிட்டு, உள்ளே இருக்கும் வழுக்கையை எல்லாம் வழித்து எடுத்துக்கொள்ளும். அப்புறம் மூடிய கையைத் திறக்காமலே, கையை வெளியிலே இழுக்கப்பார்க்கும். கை வராது. அதற்குள்ளாக ஆட்கள் வந்துவிடும். மரத்திலே ஏறமுடியாது மாட்டிக்கொள்ளும். அதுமாதிரி, ஜப்பானுக்கும் கறுவி எடுத்ததைக் கைவிட மனசில்லை. அமெரிக்காவோடாவது சிநேகிதமாக இருக்கலாம். ஆனால் அந்த நாடும், நியாயமாக, ஜப்பானுக்குப் பல யோசனைகள் சொல்லிப்பார்த்தது. ‘ஹிட்லர் கோஷ்டியார் உலக க்ஷேமத்திற்கே ஆபத்தை விளைவிப்பவர்கள். அவரோடு சேர்ந்து ஆர்ப்பாட்டம் செய்கிறவர்களை நாங்கள் சும்மா விட்டுவிடமுடியாது. சுதந்திர நாடுகள் பல தம் சுதந்திரங்களை இழந்து தவிக்கின்றன. அதுக்கெல்லாம் நாங்கள் உதவவேண்டும். அந்த நிலைமையிலே நாங்கள் உங்களை ரொம்பக் கேட்டுக்கொள்ளுகிறோம். தீயுடன் சும்மா விளையாட வேண்டாம். நாடு பிடிக்கும் யோசனையை இப்போ விட்டுவிடுங்கள்’ என்று அமெரிக்கா உபதேசம் செய்தது. ஜப்பான் ஏதோ அதைக் கேட்டதுபோல் பாவித்து, சமாதானத்திற்காகவே, தான் உலகில் இருப்பதாக நடித்து, ஒரு தூதரை அமெரிக்காவிற்கு அனுப்பிற்று. அந்த தூதர் அமெரிக்கா சென்றார். ஊக்கமாக அமெரிக்க மந்திரியோடு பேச ஆரம்பித்தார். பேச்சு வார்த்தைகள் எல்லாம் நடந்துகொண்டிருக்கின்றன.

திடீரென்று ஜப்பான் குண்டுகள் அமெரிக்காவிற்குச் சொந்தமான தீவுகளில் முக்யமான ஹாவாய் எனும் தீவில், ஹொனலூலு என்ற இடத்திலே உள்ள பிரமாண்டமான துறைமுகத்திலேயும், சீனாவிற்கு அருகில் உள்ள பிலிப்பைன் தீவின் தலைநகரான மணிலாமேலேயும் வந்து விழுந்துவிட்டன. அந்தமாதிரி செய்யும் காரியத்துக்கு என்ன பேர் என்கிறது உங்களுக்குத் தெரியும்? த்ரோகம் என்றால் அதற்கு உதாரணம் வேறே பார்க்கப்போகவா வேண்டும்.

ஜப்பான் இப்படியாக திடீரென்று யுத்தத்தில் இறங்கிவிட்டது. இதைப் பார்த்து உலகமே பிரமித்துப் போய்விட்டது. அமெரிக்காகூட இதை இவ்வளவு சீக்கிரம் எதிர்பார்க்கவில்லை.

இன்னொரு வேடிக்கை கேளுங்கள். முதல் நாள் தான் அமெரிக்கத் தலைவரான ரூஸ்வெல்ட், ஜப்பான் சக்கரவர்த்திக்கு நேரே ஒரு சேதி சொல்லி அனுப்பினார். ‘ஐயா! யுத்தம்னா லேசில்லை. அநியாயமா, பஸிபிக் மகாசமுத்திரத்தை ரத்த மகா சமுத்திரமாக்கவேண்டாம். நீங்க பார்த்து யுத்தத்தை நிறுத்தினால் நிறுத்தலாம். புத்தி சொல்லுங்கள் உங்களுடைய மந்திரிகளுக்கு. வீணாகக் கஷ்டத்தை விலைகொடுத்து வாங்கவேண்டாம்’ என்று சொல்லி அனுப்பினார். அதற்குப் பதில் வருவதற்கு முன்னாடியே ஜப்பான் தப்பு வழியில் இறங்கிவிட்டது.

இதற்கு மேல் அமெரிக்காதான் என்ன செய்யும்? அது தானாக யுத்தத்தை விரும்பி அழைக்கவில்லை. வேண்டுமென்றே ஜப்பான் அதையும், பிரிட்டனையும் சண்டைக்கிழுத்திருக்கிறது. இதற்கப்புறமும் சும்மா இருக்க முடியுமா? சுயஸ்வரூபத்தைக் காட்டவேண்டியதுதானே! ஆகவே அமெரிக்காவும் தயாராகிவிட்டது. ஜப்பானின் சவாலை அது ஏற்றுக்கொண்டு விட்டது. இதனால், உலக முழுவதிலுமே யுத்தத்தீ பற்றிக்கொண்டுவிட்டது. இனி எல்லோருக்கும் எரிச்சல்தான்.

இவ்வாறு ஜப்பான் போரிலிறங்குவதற்குக் காரணமாக இருந்தவர் ஜப்பான் சக்கரவர்த்தி அல்ல, அவர் ஒரு அப்பாவி மனுஷர். யுத்தம் ஆரம்பமாச்சு என்பதை ஸ்பெஷல் உடையில், செத்துப்போன தாத்தா பாட்டிக்கெல்லாம் போய்ச்சொன்னாராம் அவர் என்றால், எப்படிப்பட்டவர் என்று பார்த்துக்கொள்ளுங்களேன். அவருடைய மந்திரிகள் இருக்கிறார்களே, அவர்கள் மகா முரடர்கள். எல்லோரும் பட்டாளத்தைச் சேர்ந்தவாள். சண்டைக்காகவே உயிரை வைத்துக்கொண்டிருக்கிறவர்கள். அவர்களுக்கு பிரிட்டிஷ்காரர்கள் என்றால் வேப்பங்காய். அதோடு பிரிட்டன், அமெரிக்கா போன்ற நாடுகள், ஜப்பானுக்கு அந்த நாடுகளில் இருந்த உரிமைகளையும், சொத்துக்களையும் ஒன்றுமில்லாமல் செய்துவிட்டன. அது ஒரு கோபம். அதோடே சைனாவுக்கு அந்நாடுகள் எல்லாம் வேறே உதவிசெய்ய வந்துவிட்டன. ஜெர்மனி வேறே குடைகிறது. ஆகவே குதித்துவிட்டது குளத்திலே. கால்கட்டு பெரிசாகிவிடவே, முழிக்கப் போகிறது அது.

திடுதிப் என்று எதிரியைத் தாக்குவோர்களுக்கு, ஆரம்பத்தில் ஜெயம்தான் உண்டாகும். அதுமாதிரியே ஜப்பானுக்கும் சென்ற நான்கைந்து நாட்களில் கொஞ்சம் ஜெயம்தான். சிங்கப்பூரைத்தாக்கி இரண்டு பெரிய பிரிட்டிஷ் யுத்தக் கப்பல்களை மூழ்கடித்துவிட்டது. ஹாவாய் தீவில் பெரிய நாசத்தை உண்டாக்கிவிட்டு, பஸிபிக் மகாசமுத்திரமே நம் ஆதிக்கத்தில் வந்துவிட்டது என்று பறைசாற்றுகிறது.

ஓரிரு அமெரிக்கத் தீவுகளைப் பிடித்துவிட்டது. அமெரிக்காவிலும் சில ஜப்பான் விமானங்கள் புகுந்துவிட்டன. வட மலேயாவில் வேறே ஜப்பான் படைகள் இறங்குகின்றனவாம். இதற்கு தாய்லாந்து வழி விட்டது ஒரு காரணம். ஏண்டா தாய்லாந்துமீது பாய்ந்தாய் என்றால், 'பிரிட்டிஷார் தாய்லாந்து எல்லையைக் கடந்ததாக யாரோ சொன்னார்கள்! அதனால் நாங்களும் புகுந்தோம்' என்று ஒரு அண்டப் புளுகுப்புளுகிற்று.

தாய்லாந்து ஒரு சிறு தேசம். ஐந்தரை மணி நேரம் சண்டை போட்டுவிட்டு, சண்டையை நிறுத்தி விட்டதாம். இதன் வழியே ஜப்பான் மலேயாவுக்குள் நுழையப்பார்க்கிறது. அதன் நினைவெல்லாம் சிங்கப்பூர் மேலேதான். காரணம் சிங்கப்பூரில் அவ்வளவு பலமான பாதுகாப்புகளும், கப்பல்களும், விமானங்களும் பிரிட்டிஷாருக்கு இருக்கின்றன. அவ்வளவையும் வைத்துக்கொண்டு பிரிட்டிஷார் ஜப்பானை லேசில் விடப்போகிறார்களா என்ன? அமெரிக்கா தன் வேலையைப் பூரணமாகக் காட்ட ஆரம்பித்துவிட்டால், ஜப்பான் காலிதான்.

இப்பொழுதே ஜப்பானிய நகரங்கள் மீதும், வேறு சில நகர்கள்மீதும் அமெரிக்க விமானங்கள் குண்டுகளை வீசிவிட்டன. கண்ணாடி வீட்டிலிருப்பவன் தெருவில் போகிறவன் மேலே கல்வீசலாமா? அது தெரியவில்லை, மரத்தாலேயே வீடுகளைக்கட்டிக் கொண்டுவாழும் ஜப்பானுக்கு, அக்னி பகவான் பாடு இனி ஜப்பானில் ஆனந்தம்தான். ஆரம்ப வெற்றிகளைக்கண்டு ஜப்பான் கொம்மாளம் போடலாம். ஆனால் கடைசியில் தனித்துச்சிரிப்பவனே ரஸித்துச் சிரிக்கலாம் என்கிற உண்மையை அது மறந்துவிடப் படாது. மகாபலசாலிகளான அமெரிக்கா, பிரிட்டன், கானடா, ஆஸ்திரேலியா, ஆப்பிரிக்கா, சைனா போன்ற தேசங்கள் எல்லாம் ஜப்பான்மீது போர் தொடுக்க முன்வந்துவிட்டன. இந்தியாவை இவ்வாறாக நாற்புறத்திலும் யுத்தம் நெருங்கிவிட்டது. இது உலகிற்கே ஒரு சோதனை காலம்தான். ஆனால் சரியான வழியில் போகிறவன் பயப்படுவானேன்?

அமெரிக்கா, பிரிட்டன் ஆகிய நாடுகள் போராட முன்வந்திருப்பது நல்ல காரியத்திற்குத்தானே? அமெரிக்காவில், அமெரிக்க–ஜப்பானியப்போருக்குப் பூரண ஆதரவு இருக்கிறது என்பது சண்டையே வேண்டாமென்ற லிண்ட்பர்க் என்பவர்கூட இப்பொழுது சண்டையை ஆரிப்பதிலிருந்து தெரியும்! ஜப்பானுக்கு என்னமோ இது போதாத காலம்தான்.

### ருஷியப்போரும், ஆபிரிக்கச்சண்டையும்

ருஷியாவின் தலைநகர் அருகே ஜெர்மானியர் நெருங்க பார்க்கிறார்கள். ஜம்பம் சாயவில்லை. குளிரோ கொல்லுகிறது, குளிர்காலம் போகட்டும், பிறகு பார்த்துக்கொள்ளலாம் என்று இருக்கப்போகிறார்கள் ஜெர்மானியர் என்றொரு வதந்தி. பசியால் வாடிச்சாகிறார்கள் பல ஜெர்மானியர். ருஷியாவிலே தென்புறத்திலே, ஜெர்மானியர் ஓடுகிற ஓட்டத்தைப் பார்த்தால் பலே தமாஷாக இருக்கிறது. ஓட்டப்பந்தயத்தில் அவர்களை யாரும் ஜெயிக்க முடியாது என்று தோன்றுகிறது. ராஸ்டாவ் எனும் முக்யமான நகரத்தைப் பிடித்துவிட்டு, பிறகு ருஷியர்களிடம் உதை வாங்க ஆரம்பித்து, ஓட்டம் பிடித்தார்கள். கொதிக்கிற பாலில் வாயை வைத்துவிட்டு ஓடுகிற பூனை மாதிரி, கத்திக்கொண்டே ஓடுகிறார்கள். அவர்களை ருஷியர்களும் துரத்திக்கொண்டே ஓடுகிறார்கள். பின்னாலே ஜெர்மன் படைகள் உதவ வரலாம். ஆனால் துரத்தினவரை லாபம்தானே? ஜெர்மனிக்கு அவ்வளவும் நஷ்டம்தானே?

வட ஆபிரிகாவில் உள்ள லிபியாவில் நடக்கும் சண்டை ஒரு முடிவானதாகத் தெரியவில்லை. அங்கே இந்திய வீரர்கள் போடு போடு என்று போட்டு, வெற்றிமாலை சூடி வருகிறார்கள். அங்கே நியூஜிலந்து, பிரிட்டிஷ் துருப்புகளும் போராடுகிறார்கள். வட ஆபிரிகாவிலிருந்து ஜெர்மானியரைத் துரத்தி விடுவதே இந்தப்போரின் நோக்கமாகும்.

# தாய்லாந்து: பழைய சரித்திரமும், புதிய போக்கும்

## அயூத்யாவைத் தலைநகராக ஆண்ட அரசர்

## புரட்சியும், சூழ்ச்சியும், புதிய அரசாங்கமும்

### ஜப்பானிய-தாய்லாந்து நட்பு

ஜப்பான் அமெரிக்காவுடன் மோசக்கருத்தோடு சமரசப் பேச்சு ஒரு பக்கம் நடத்திக்கொண்டிருக்கும் போது, வேறொருபக்கம், பசிபிக் கடலில் புதிய யுத்தத்திற்குத் தயாராக சகல ஏற்பாடுகளும், செய்திருந்தது. பேச்சு முடிவதற்குள் திடீரென்று யாதொரு எச்சரிக்கையுமில்லாமல் அமெரிக்காவின் மேலும், பிரிட்டன்மேலும் போர் தொடுத்தது. பசிபிக் கடலில் பல இடங்களைத் தாக்கிவிட்டு, பிறகு ஜப்பான் தாய்லாந்துக்குள் பிரவேசித்துவிட்டது. தாய்லாந்து அரசாங்கம் ஜப்பானுடன் ஒரு ஒப்பந்தம் செய்துகொண்டது. அதன்படி, ஜப்பானியத் துருப்புகளைத் தன் நாட்டுவழியாகச் செல்வதற்கு அனுமதித்திருக்கிறது.

தாய்லாந்து தூரக்கிழக்குப் பிரதேச யுத்தத்தில், மிக முக்கியமான ஒரு நாடு. இண்டோ-சீனாவுக்கும், பர்மாவுக்கும் மத்தியில் தாய்லாந்து இருக்கிறது. தாய்லாந்தைக் கைப்பற்றவேண்டும் என்ற நோக்கம் ஜப்பானியர்களுக்கு அதிக காலமாக உண்டு. அதனால்தான் அவர்கள் இண்டோ-சீனாவின் ராணுவத் தளங்களை முதலில் பிடித்துக் கொண்டார்கள். இண்டோ-சீனாவுக்கு மேற்கில் உள்ள தாய்லாந்தைப் பிடிக்கவேண்டும் என்ற ஜப்பானின் நோக்கம் இப்போது தற்காலிகமாக நிறைவேறியிருக்கிறது. தாய்லாந்துக்கு அடுத்தாப்போல் மேற்கில் இருக்கும் பர்மா, ஜப்பானுடைய அதிக்கிரமத்தின் ஜாபிதாவில் உள்ள அடுத்த நாடு என்பதில் சந்தேகமில்லை. ஆனால் தாய்லாந்து ஜப்பானின் கைவசமானதுபோல, பர்மாவைக் கைவசப் படுத்தமுடியாது. பர்மாவுடைய பாதுகாப்பு ஏற்பாடுகள் தகுதியாகப் பலப்படுத்தப்பட்டுள்ளன.

தாய்லாந்து நாட்டைப்பற்றியும், அதன் அரச குடும்பத்தைப்பற்றியும், அரசியல் சரித்திரத்தைப் பற்றியும் பல ருசிகரமான விஷயங்கள் வெளியாயிருக்கின்றன. அவைகளைப்பற்றி இப்போது கவனிக்கலாம்.

"தாய்லாந்து" அல்லது "சுதந்தர மக்களின் ராஜ்யம்" என்ற பெயர் 1939 மீ ஜூன்மீ 24வ கொடுக்கப்பட்டது. அதற்குமுன் "சையாம்" என்ற பெயர் இருந்தது. தாய்லாந்து மந்திரி சபையின் உத்தரவினால் இது நடந்தது. தாய்லாந்தின் விஸ்தீர்ணம் சுமார் 2 லட்சம் சதுர மைல்கள்; அதனுடைய ஜனத்தொகை சுமார் ஒரு கோடியே 45 லட்சம். பிரிட்டிஷ் அரசாங்கமும், பிரெஞ்சு அரசாங்கமும், தாய்லாந்தின் சுதந்தரத்தை அங்கீகரித்திருக்கின்றன.

### சையாமில் குடியேற்றம்

தாய்லாந்து மக்கள் யாங்டீஸ் நதிக்கு வடக்கிலுள்ள சுவேச்சான் பிரதேசத்திலிருந்து, யூனன் மாகாணம் வழியாக, பர்மாவுக்கும், சையாமுக்கும் சென்று சுமார் 800 வருஷங்களுக்குமுன் குடியேறினார்கள். இவர்கள் பெரும்பாலும் விவசாயிகள். இவர்களுடன் முதலில் வியாபார சம்பந்தம் வைத்துக்கொண்டவர்கள் போர்ச்சுகல் தேசத்தைச் சேர்ந்த

வர்கள். 300 வருஷங்களுக்குமுன் பர்மாவோடு போர் செய்வதற்கு உதவி செய்தவர்கள் போர்ச்சுகல் தேசத்தார்களதான். பின்னர், டச்சுக்காரர்களும், பிரிட்டிஷார்களும் சையாமுடன் வியாபார சம்பந்தம் வைத்துக்கொண்டார்கள்.

17-வது நூற்றுண்டின் பிற்பகுதியில், பிரானாரை என்ற அரசர் சையாமை ஆண்டுவந்தார். அவருடைய தலை நகரம் அயூத்யா என்பது வர்த்தக விஷயங்களையெல்லாம் அவர், தானே கவனித்து வந்தார். அவருடைய ஆட்சியின் கீழ், சில ஜப்பானியர்கள் சையாமில் குடியேறினர்கள். கொஞ்சங் கொஞ்சமாக ஜப்பான் ஒரு பெரிய வியாபார நாடாக ஆய்விட்டது. சீனு, ஜப்பான், சுமாத்ரா, இந்தியா முதலிய நாடுகள் சையாமுடன் வியாபாரம் செய்து கொண்டுவந்தன.

பிறகு பிரெஞ்சுக்காரர்கள் சையாமுக்கு வந்து சேர்ந்தார்கள். அவர்கள் கிரிஸ்தவ மதத்தில் ஒரு பகுதியாகிய ரோமன் கத்தோலிக்க மதத்தைச் சேர்ந்தவர்கள். 25 வருஷங்களுக்குப் பிறகு 6 பிரெஞ்சு யுத்தக்கப்பல்களும், 1,400 பிரெஞ்சு துருப்புகளும், சையாமுக்கு அனுப்பப்பட்டன. சையாம் அரசர் தன்னுடைய நாட்டின் பாதுகாப்புக்காக அவைகளை உபயோகப்படுத்த எண்ணினர். பாங்காக், மர்காயி, அயூத்யா முதலிய இடங்களில் பிரெஞ்சு பட்டாளங்கள் நிறுத்தப்பட்டன. டச்சுக்காரர்களிடமிருந்தும், பிரிட்டிஷார்களிடமிருந்தும் சையாமைக் காப்பாற்றுவதற்காக இது செய்யப்பட்டதாம். ஆனல், சையாம் அரசர் பிரானாரையைக் கத்தோலிக் மதத்தில் சேரும்படி செய்வதற்கு, பிரெஞ்சுக் கத்தோலிக்க பாதிரிகள் முயற்சிசெய்தார்கள். இதனுல் அரச குடும்பத்தில் ஒரு கிளர்ச்சி நடந்தது. அரசருக்குப்பின் வார்சாயிருந்தவர்கள் கொல்லப்பட்டார்கள். அரசரும் நோய்வாய்ப்பட்டு இறந்துபோனர். பிறகு பிரெஞ்சுத் துருப்புகள் சையாமைவிட்டுப் போய்விட்டன.

## அரச சந்ததி மாறுதல்

சையாமில் அரச சந்ததி மாறிவிட்டது. பர்மாவுக்கும் சையாமுக்கும் 1759—1767 வருஷங்களில் சண்டை நடந்தது. பியாடக் என்ற சீன ராணுவத் தலைவர் சையாமில் தனிப்பட்ட ஆட்சியை நிலைநிறுத்தினர். அவருக்குப்பின் மாங்காட் என்ற அரசர் சிம்மாசனம் ஏறினர். அவர் புத்த சன்னியாச மடத்தில் இருந்த காலத்தில் அமெரிக்க கிறிஸ்தவ பாதிரிகளிடமிருந்து ஆங்கிலம், லத்தின், மேல்நாட்டு விஞ்ஞான சாஸ்திரம் முதலியன கற்றுக்கொண்டார்.

மாங்காட் அரசர் ஆட்சியின்கீழ் அயல் நாடுகளுடன் வியாபார ஒப்பந்தங்கள் செய்யப்பட்டன. மேல் நாட்டு கல்வி விஷயங்கள் சையாமில் பரப்பப்பட்டன. தன்னுடைய அரச குமாரர் சூளாவாங்க்கார்ன் என்பவருக்கு ஒரு ஆங்கிலப் பெண்மணியை உபாத்தியாயராகவைத்து மேல்நாட்டுப் படிப்பைக் கற்றுக்கொடுக்கும்படி செய்தார். அவர் சிம்மாசனமேறியதும், பழைய பொருளாதார சமூகத் திட்டத்தை கொஞ்சங் கொஞ்சமாக அழித்தார்; அரசாங்க உத்தியோகச் சேவையை ஒழுங்குபடுத்தினர்; அடிமைகளை விற்பதை ஒழித்தார்; தபால், ரயில்வே முதலிய புதிய சீர்திருத்தங்களைச் செய்தார்.

கடைசியில் அவருக்கும் இண்டோ-சீனுவில் உள்ள பிரெஞ்சு அரசாங்கத்துக்கும் போர் மூண்டது. கடைசியில் சமாதானம் ஏற்பட்டது. சமாதானத்தின் பலனுக சையாம் தன்னுடைய நாட்டில் ஏறக்குறைய பாதியை இழந்துவிட்டது. மிகுதியாயுள்ள சையாமின் சுதந்தரத்தைப் பாதுகாப்பதாக பிரெஞ்சு அரசாங்கமும், பிரிட்டிஷ் அரசாங்கமும் உறுதிகூறின.

## வஜ்ஜிரவுக் அரசர் சீர்திருத்தம்

சூளாலாங்க்கார்ன் அரசர் மலேயா நாடுகள், ஜாவா, இந்தியா, ஐரோப்பா முதலிய நாடுகளுக்குச் சுற்றுப்பிரயாணம் சென்றர். தன்னுடைய அரச குமாரர்களை ஐரோப்பாவுக்கு அனுப்பிப் படிக்கவைத்தார். அடுத்தபடியாக, வஜ்ஜிரவுக் அரசராக வந்தார். அவர் பல சீர்திருத்தங்களைச் செய்தார். "பாய் ஸ்கவுட்" என்ற சாரணர் இயக்கத்தை ஏற்படுத்தினர். ஒரு புதிய காலண்டர் தேதித் திட்டம், தேசியக் கல்வித் திட்டம், கட்டாய அம்மை குத்துதல் முதலிய சீர்திருத்தங்களைச் செய்தார்.

அவருக்குப்பிறகு, பிரஜாதிபோக் என்ற அரசர் சையாமை ஆண்டார். அவர் ஆண்டது 1925-லிருந்து 1935 வரைக்கும். 1935-ல் அரசாங்கத்தைக் கைவிட்டுவிடும்படி அவருடைய ராணுவத் தலைவர்களால் கட்டாயப்படுத்தப்பட்டார். அவர்தான் ஜனப் பிரதிநிதி யாட்சியை சையாமில் ஏற்படுத்தினர். சிம்மாசனமேறியவுடன் ஒரு ஆலோசனைச் சபையை ஏற்படுத்தினர்; பிறகு 'பிரிவு கவுன்சில் கமிட்டி' ஒன்று ஏற்படுத்தினர். தந்தியில்லாக்கம்பி, ஆகாய விமானப் போக்குவரத்து சேவை முதலிய சீர்திருத்தங்களைச் செய்தார். இதர நாடுகளுடன் வியாபார ஒப்பந்தங்கள் செய்து தம் நாட்டுக்கு பொருளாதார சுதந்தரத்தை நிலைநிறுத்தினர். 1926–27-ல் வரவு செலவுத் திட்டம் ஒழுங்குபடுத்தப்பட்டது. இதற்கு முக்கிய காரணம் அநேக அரசாங்க உத்தியோகங்களைக் குறைத்ததுதான். இதனல் பல உத்தியோகஸ்தர்கள் அரசர்மேல் வெறுப்புக்கொண்டார்கள்.

1939-ம் ஜூன் 24உ திடீரென்று சையாமில் புரட்சி ஏற்பட்டது. சையாம் துருப்புகள் தலை நகரைப் பிடித்துக்கொண்டன; பிரஜாதிபோக் அரசர் பதவியிலிருந்து விலகும்படி கட்டாயப்படுத்தப்பட்டார். இந்தப் புரட்சியை நடத்திய தலைவர்கள் ஜெர்மனியில் ராணுவப்படிப்பு படித்த பகால் என்ற சையாம் பட்டாளத்தலைவர், ஜெர்மன் பட்டாளத்தில் முன்பு வேலை செய்திருந்த பியாசிங், ஜெர்மனியில் படித்து சையாம் ராணுவப் பயிற்சிப் பள்ளிக்கூடத்துக்குத் தலைவராயிருந்த பிரா பிரசாசனு, முதலியவர்கள்.

## புரட்சிக்குப்பின்.

புரட்சிக்குப்பிறகு பல அரசியல் மாறுதல்களும், கலகங்களும் ஏற்பட்டன. பிரஜாதிபோக் அரசர் தலைமையின்கீழ் அரசாங்கம் நடந்தது. கடைசியில் அரசர் கண் வைத்தியத்துக்காக இங்கிலாந்துக்குச் சென்று அங்கிருந்து தன்னுடைய அரச பதவியை ராஜிநாமா செய்துவிட்டார். பொது மக்களுக்கு விரோதமாக அரசாங்கம் நடத்தப்படுவதாலும், அதிகாரத்திலிருக்கும் கட்சி எதிர்க்கட்சியினருக்குத் தீங்குகள் விளைவிப்பதாலும், சகல அதிகாரமும் "பொது மக்கள் கட்சி" என்று பேரை வைத்திருக்கும் கட்சி தானே வகித்து மக்களுக்கு விரோதமாக அரசாங்கம் செய்வதாலும், தான் அரச பதவியைக் கைவிட்டு விட்டதாக ஒரு கடிதத்தில் எழுதியிருந்தார்.

அவருக்குப்பின் 10-வயது அரச குமாரர், சையாம் அல்லது தாய்லாந்துக்கு அரசரானர். ஒரு அரசாங்க சபை நிர்வாகத்தை வகித்து நடத்திவருகிறது.


1937-ம் பிரிட்டன், பிரான்சு, ஜெர்மனி, இத்தாலி, அமெரிக்கா இவையெல்லாம் தாய்லாந்தை சுதந்தர நாடாக அங்கீகாரம் செய்தன. ஜப்பானுடன் தாய்லாந்து நெருங்கிய தொடர்பு கொண்டிருந்தது. மஞ்சூரியாவில் ஜப்பான் செய்த செய்கையை அகில தேசீய சங்கம் ('லீக் அப் நேஷன்ஸ்') கண்டித்தபோது, தாய்லாந்து 'ஓட்' செய்யவில்லை. ஜப்பானுடன் தாய்லாந்து பல உடன்படிக்கைகள் செய்துகொண்டது. 1939–40-ம்த்தில் இரண்டு நாடுகளும் விமான உடன்படிக்கை செய்துகொண்டன. அதன்படி ஜப்பான் தாய்லாந்தின் சுதந்தரத்தை அங்கீகரித்தது. அப்போதிருந்து தாய்லாந்தைத் தங்களுடைய புதிய நேசநாடு என்று ஜப்பானியர்கள் கூறிவந்தார்கள்.

## சமீப சம்பவங்கள்.

1940-ம்த்தில் பிரான்சு வீழ்ச்சியடைந்ததும், தாய்லாந்து, பிரெஞ்சு இண்டோ-சீனுவிலிருந்து சில பாகங்களைக் கைப்பற்றிக்கொண்டது. இப்பாகங்கள் முதலில் தாய்லாந்துக்குச் சொந்தமாயிருந்தவை. இது ஜப்பானுடைய தூண்டுதலின்மேல் நடந்ததாகத்தெரிகிறது. ஜப்பான் இரண்டு நாடுகளுக்கும் மத்தியஸ்தம் பேசுவதைப்போல வந்து, இண்டோ-சீனுவிலிருந்து 25,000 சதுர மைல் விஸ்தீரணத்தை தாய்லாந்துக்குக் கொடுத்துவிடவேண்டுமென்று தீர்மானித்தது. அதன்படியே கொடுக்கப்பட்டது.

1941-ம் ஜூலை இண்டோ-சீனுவின் தெற்கு பாகத்தில் உள்ள ராணுவத் தளங்களையும், விமானத் தளங்களையும், ஜப்பான் கைப்பற்றிக்கொள்வதற்கு விஷியிலுள்ள பிரெஞ்சு அரசாங்கம் ஒத்துக்கொண்டது. தாய்லாந்திலும் அப்படிப்பட்ட ஏற்பாடு செய்வதற்கு ஜப்பான் முயற்சி செய்தது. அந்த சமயத்தில் தாய்லாந்து அதற்கு இடங்கொடுக்கவில்லை. ஆனல் சென்ற வாரத்தில் ஜப்பான் தாய்லாந்தில் பிரவேசித்து விட்டது. தாய்லாந்தும் அதனுடன் ஒப்பந்தம் செய்துகொண்டது.

## பாலைவன யுத்தத்தில் ஜெர்மானியர்கள் இழந்த துப்பாக்கிகள் !



தற்போது நடக்கும் மேற்குப் பாலைவன யுத்தத்தில் ஜெர்மானியர்களிடமிருந்து கைப்பற்றப்பட்ட டாங்கியைச்சுடும் துப்பாக்கி ஒன்றை பிரிட்டிஷ் ராணுவவீரர் மதிப்புப் போடுவதை படத்தில் காணலாம்.

---

# பசிபிக் கடலில் யுத்தத் தீ

## ஜப்பானுடைய பெருத்த மோசடி

### ஹிட்லருடைய தூண்டுதல்

### ஜனநாயக நாடுகளின் ஒற்றுமை

ஜப்பான் அதிக காலமாக மதிலின்மேல் உள்ள பூனையைப்போல் இருந்தது. கடைசியில் ஜெர்மனியின் தூண்டுதலின்மேல் யுத்தத்தில் இறங்கிவிட்டது. ஜெர்மனியோடும் இத்தாலியோடும் நேரடியாக யுத்தத்தில் சேர்ந்துகொண்டதால், இந்த யுத்தம் உண்மையில் உலக யுத்தமாக மாறிவிட்டது. உலகத்திலுள்ள எல்லா நாடுகளும் இப்போது யுத்தத்தில் கலந்துகொண்டிருக்கின்றன. எல்லா கடல்களிலும் யுத்தம் நடக்கிறது. அட்லாண்டிக் கடலிலும், பசிபிக் கடலிலும், மத்திய தரைக் கடலிலும், அச்சு நாடுகளாகிய ஜெர்மனி, இத்தாலி, ஜப்பான், உலகத்தை அடிமைப்படுத்துவதற்காகப் பெரிய போரை நடத்திக்கொண்டு வருகின்றன. இவைகளை எதிர்த்து மற்ற நாடுகள் கடுமையாகச் சண்டை செய்கின்றன.

ஜப்பான் ஒரு பெருத்த மோசடியைச் செய்து இந்தப் புதிய யுத்தத்தை, பசிபிக் கடலில் ஆரம்பித்திருக்கிறது. அமெரிக்காவுடன் சமரசப்பேச்சு ஒரு பக்கம் நடத்திக்கொண்டு, மற்றொரு பக்கம் அமெரிக்காவைத் தாக்குவதற்கு, சகல ஏற்பாடுகளையும் ஜப்பான் செய்திருந்தது. சமாதானமாகப் போவதற்காக எண்ணம் இருப்பதைப் போலக் காட்டிக்கொண்டு, ஜப்பானியப் பிரதிநிதிகள் அமெரிக்காவின் தலை நகரத்தில் கால தாமதம் செய்துகொண்டிருந்தார்கள். அவர்கள் பேச்சு நடத்திக்கொண்டிருக்கும்போதே, ஜப்பானிய வெடிகுண்டு விமானங்கள் அமெரிக்கக் கடற்படைத் தளங்களையும், பிரிட்டிஷ் கடற்படைத் தளங்களையும் தாக்கி உள்ளன. இது வேண்டுமென்றே செய்த மோசடி என்று பிரிட்டிஷ் முதல் மந்திரி, மிஸ்டர் சர்ச்சில், பிரிட்டிஷ் பார்லிமெண்டு சபையில் குறிப்பிட்டிருக்கிறார்.

### ஜப்பானின் பேராசை

இப்போது ஒரு விஷயம் விளக்கமாக தெரிகிறது. ஜப்பான் தூரக் கிழக்குப் பிரதேசத்தில் தலைமை வகித்து அங்குள்ள நாடுகளின்மேலெல்லாம் முழு அதிகாரமும் செலுத்தவேண்டும் என்ற பேராசையுடன் முதலிலிருந்து நடந்து வந்திருக்கிறது. பசிபிக்கடலில் தன்னுடைய ஆதிக்கம் பூர்ணமாக இருக்கவேண்டும் என்பது ஜப்பானுடைய ஆணித்தரமான கொள்கை. இந்தப் பேராசைக்கும் எண்ணத்துக்கும் அமெரிக்கா இடங்கொடுக்காதென்று ஜப்பானுக்கு நன்றாய்த்தெரியும். உண்மையில், அமெரிக்காவுடன் சமாதானம் செய்துகொள்ளவேண்டும் என்ற எண்ணம் ஜப்பானுக்குக் கிடையாது. அதனால்தான் பரஸ்பர நேச உடன்படிக்கைக்கு ஜப்பான் ஒத்துக் கொள்ளவில்லை. அமெரிக்காவில் அரசாங்கக் காரியதரிசியாக இருக்கும் மிஸ்டர் கார்டெல்ஹல் என்பவர், அமெரிக்காவும், ஜப்பானும் ஒன்றையொன்று தாக்கக் கூடாது என்ற ஒப்பந்தம் வகுத்திருந்தார். அதற்கு ஜப்பானியப் பிரதிநிதிகள் சம்மதிக்கவில்லை ; ஆனால் சம்மதிப்பதற்குச் சில யோசனைகள் கூறுவதுபோல பேச்சுகளை வளர்த்திக் கொண்டு வந்தார்கள். அவர்களுடைய மோசக் கருத்தை பிரிசிடெண்ட் ரூஸ்வெல்ட் கண்டித்துப் பேசியிருக்கிறார். பசிபிக்கடலில் சாமாதானத்தை நிலை நிறுத்த பிரிசிடெண்ட் ரூஸ்வெல்ட் எவ்வளவோ பாடுபட்டார். கடைசியில் ஜப்பானியச் சக்கரவர்த்திக்கு ஒரு உருக்கமான வேண்டுகோளும் அனுப்பியிருந்தார். அவருடைய முயற்சி யெல்லாம் வீணாய்ப் போய்விட்டது.

### தொத்து நோய்

கௌரவமும், ஒழுங்குமில்லாமல் ஏன் ஜப்பான் இந்த மோசடியான காரியத்தைச் செய்திருக்கிறது ? இதன் உண்மையை மிஸ்டர் சர்ச்சில் விளக்கியிருக்கிறார். ஹிட்லருடைய பைத்தியக்காரத்தனம், தொத்து நோயைப் போல ஜப்பானையும் பிடித்துக்கொண்டது என்று அவர் கூறியிருக்கிறார். பிரிட்டனைப் கைப்பற்ற வேண்டும் என்று ஹிட்லர் செய்த முயற்சி கைகூடவில்லை. மத்தியக் கிழக்குப் பிரதேசத்தில் பிரிட்டனுடைய ராணுவ பலத்தினால் ஹிட்லருடைய எண்ணம் நிறைவேறவில்லை. ரஷ்யாவில், ஹிட்லருடைய துருப்புகள் சேற்றில் அழுந்திக்கொண்டது போல அகப்பட்டுக்கொண்டு தங்களுடைய காரியங்களைச் சாதிக்க முடியாமல் இருக்கின்றன. இந்த கஷ்டமான நிலைமையில், தூரக்கிழக்குப் பிரதேசத்தில் ஜப்பான் சண்டையை ஆரம்பித்தால் ஜெர்மனிக்குச்

சௌகரியமாய் இருக்கும் என்ற எண்ணத்தின் மேல் ஜப்பான் யுத்தத்தில் இறங்கும்படி தூண்டப் பட்டது. பசிபிக் கடலில் யுத்தம் நடந்தால், ஜெர் மனியின் எதிரிகளின் கவனம் வேறு வழியில் திருப்பப்படுமல்லவ ? ஹிட்லருடைய எண்ணத்தை ஜப்பான் நிறைவேற்றிவிட்டது. அதற்கு முன்னமே யே, பொருளாதார முற்றுகையின் கீழ் ஜப்பானுக் குப் பல அசௌகரியங்கள் ஏற்பட்டன. அமெரிக்கா, பிரிட்டன், சீன, டச்சுக் கிழக்கிந்திய தீவுகள் ஒன்று சேர்ந்து ஜப்பானுக்கு வெளியிலிருந்து யாதொரு பொருளும் வருவதற்கு இடங்கொடாமல் முற்றுகை யிட்டன. இந்த முற்றுகையை உடைப்பதற்கும், கிழக்கு ஆசியா முழுவதையும் கைப்பற்றவேண்டும் என்ற பேராசையை நிறைவேற்றுவதற்கும், ஜப்பான் போர் தொடங்கியிருக்கிறது.

### ஆரம்ப வெற்றிகள்

ஆரம்பத்தில், ஜப்பான் சில வெற்றிகளை அடைந் திருக்கிறதென்பதை யாராலும் மறுக்க முடியாது. ஒரு கொள்ளைக்காரன் தன் வேலையை ஆரம்பித்தால் திடீரென்று கண்ணடிகளை எல்லாம் கல்லெறிந்து உடைத்து, கடையில் இருக்கும் சாமான்களை அபகறித் துக்கொண்டு போவானல்லவா? அதைப்போல ஜப் பான் இருக்கிறது. ஆனுல் ஒரு விஷயத்தைப்பற்றி மிஸ்டர் சர்ச்சில் எச்சரிக்கை செய்திருக்கிருர். ஜப்பா னுடைய ராணுவ பலத்தைக் குறித்து நாம் குறைவான எண்ணம் கொள்ளக்கூடாது. ஜப்பானுக்குப் பலம் பொருந்திய கப்பற் படை இருக்கிறது. இந்த யுத்தத் திற்காக முன் சாக்கிரதையான சகல ஏற்பாடுகளையும் செய்திருக்கிறது; வேண்டிய சாமான்களைச் சேகரித் திருக்கிறது.

"ஏ.பி.சி.டி. பிரண்ட்" என்ற ஜனநாயக நாடு களின் ஒற்றுமை முகப்பும், ரஷ்யாவின் பலமும் ஜப்பானுடைய பேராசைத் திட்டத்தை அடியோடு அழிப்பதற்குப் போதுமானவை. ஆனுல் அதி சீக் கிரத்தில் ஜப்பானைத் தோற்கடிப்பது சுலபமான காரி மல்ல. யுத்தம் நீண்ட காலம் நடக்கும். முடி வில்தான் ஜப்பானைத் தோற்கடிக்கலாம் இப்போது ஜப் பானுக்கு எதிரிடையாகப் பல நாடுகள் இருக்கின்றன. மலேயா, சிங்கப்பூர், ஹாங்காங் முதலிய இடங்களை ஜப்பான் தாக்கியிருப்பதால், பிரிட்டன் ஜப்பான்மேல் போர் தொடுத்திருக்கிறது என்று மிஸ்டர் சர்ச்சில் பிரிட்டிஷ் பார்லிமெண்டு சபையில் அறிவித்திருக்கி ருர். ஹாவே தீவுகளையும் இதர அமெரிக்கப் பிர தேசங்களையும் ஜப்பான் தாக்கியதால், அமெரிக்கா ஜப்பானமேல் போர் தொடுத்திருக்கிறது. போர் தொடுக்கும்படி பிரசிடெண்ட் ரூஸ்வெல்ட் அனுப் பிய வேண்டுகோள் அமெரிக்க சட்டசபையில் அங்கீ கரிக்கப்பட்டது.

### ஜப்பானுக்குப் பலத்த எதிர்ப்பு

இதல்லாமல், கனடா, ஆஸ்திரேலியா, நியூஜி லாந்து, இந்தியா, இதர பிரிட்டிஷ் சாம்ராஜ்ய நாடு கள், நெதர்லாந்து, லத்தீன் அமெரிக்க ஜனநாயக நாடுகள், காஸ்டாரிகா, சால்வடார், கியூபா, மெக் ஸிகோ, பிரேசில், முதலிய நாடுகளெல்லாம் ஜப் பான்மேல் போர் தொடுத்துள்ளன.

ஜப்பானிய விமானங்கள், பசிபிக்கடலிலுள்ள பெர்ல் துறைமுகம், குவாம், பிலிப்பைன் தீவுகள், முதலியவைகளைத் தாக்கியிருக்கின்றன. சிங்கப் பூரைத் தாக்கியதனுல் பலத்தசேதம் ஒன்றும் ஏற் படவில்லை என்று தெரிகிறது. மலேய தீபகற்பத்தில் கோடாபாரு என்ற ரயில்வே தளத்தைக் கைப்பற்ற ஜப்பானியர்செய்த முயற்சி கைகூடவில்லை. தாய் லாந்து குடக்கடலில் பட்டாணி என்ற இடத்தில் ஜப் பானியத்துருப்புகள் இறங்கியிருக்கின்றன. தாய்லாந் தின் தலைநகராகிய பாங்காக் ஜப்பானியக்கப்பல் வெடி குண்டுகளால் தாக்கப்பட்டது. 5½ மணிநேரம் எதிர்த் துச் சண்டைபோட்டு கடைசியில் தாய்லாந்து ஜப்பா னுடன் சமரசமாய்விட்டது. தாய்லாந்தின் வழியாக ஜப்பானியத்துருப்புகள் செல்வதற்கு அனுமதிகொடுக் கப்பட்டது.

தாய்லாந்து வீழ்ச்சியடைந்ததால், மலேயாவையும், பர்மாவையும் பாதுகாப்பதில் இப்போது கவனம் செலுத்தவேண்டும். மலேயாவிலும், பர்மாவிலும், சிங்கப்பூரிலும் விமானப்படை விமானங்களும், கப் பற்படை விமானங்களும் பாதுகாப்பு வேலைசெய்து வருகின்றன. இந்தப் பிரதேசத்தில் ஜப்பானியர் பெரும் வெற்றியடைய முடியாது.

---

# இந்தியாவும், யுத்த சாமான்களும்

## "பாரசூட்" உற்பத்திசெய்தல்

### யந்திரம், மரம், துணி, உணவு 'சப்ளை'கள்

### 50,000 சாமான்களில் 37,000 இந்தியா அனுப்புகிறது.

1941-ம் ஞ எப்ரல்மீ த்திலிருந்து, 1941-ம் ஞ செப்டெம்பர்மீ முடிய, இந்த ஆறுமாத காலத்துக் குள் கோடிக்கணக்கான கஜ துணி வகைகளுக்கு இந்தியாவில் 'ஆர்டர்' கொடுக்கப்பட்டிருக்கிறது. இன்னும் 70 லட்சம் மணல் கோணிகளும் அனுப்பும் படி இந்தியா கேட்டுக்கொள்ளப்பட்டது. இந்த 'ஆர்டர்'களெல்லாம் கிழக்குத் தொகுதி 'சப்ளை' சபையால் கொடுக்கப்பட்டது. யுத்தத்துக்கு 50,000 சாமான்கள் தேவையாயிருக்கின்றன. இதில் இந்தியா 37,500 சாமான்கள் கொடுத்து உதவுகிறது. மீதி சாமான்கள் செய்வது விஷயமாக ஆராய்ச்சி நடந்து வருகிறது. நூற்றுக்கணக்கான புதிய புதிய சாமான்கள் செய்யும் திறமை இந்தியாவில் இருப்ப தாகக் கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது.

கிழக்குத் தொகுதி 'சப்ளை' சபையில் இருக்கும் இந்திய அங்கத்தினர் அப்போதைக்கப்போது 'சப்ளை' விஷயமாக இந்தியாவில் உள்ள நிலவரத்தை எடுத் துரைக்கிருர். இதனுல் சபை மூலமாக மத்தியக் கிழக்கிலும், தூரக் கிழக்கிலும் உள்ள துருப்புகளுக்கு வேண்டிய சாமான்களை இந்தியா அனுப்ப முடிகிறது.

பருத்தித் துணி, மழை புகாத துணி, காலிகோ, துவாலை முதலியவற்றை ஏராளமாக 'சப்ளை' செய் யும்படி 'சப்ளை' சபை இந்தியாவைக் கேட்டிருக்கிறது. இதைத் தவிர அநேகவித பருத்தித் துணிகளுக்கும் அது 'ஆர்டர்' கொடுத்தது. இன்னும் துருப்பு களுக்கு வேண்டிய கால் சட்டை, கைச் சட்டை முதலிய அநேகவித ஆடை வகைகளுக்கும் 'ஆர்டர்கள்' கொடுக்கப்பட்டன.

### என்சினீயரிங் சாமான்கள்.

தவிர மின்சார மோட்டார்கள், மேஜை விசிறிகள், நெருப்பணைக்கும் யந்திரங்கள் முதலிய அநேக வகை எஞ்சினீரிங் சாமான்கள் 'சப்ளை' செய்யும்படி இந்தியாவுக்கு 'ஆர்டர்'கள் கொடுக்கப்பட்டிருக்கின் றன. எழுதும் காகிதம், படங்கள் அச்சடிப்பதற்கு வேண்டிய காகிதம், முதலியவை ஏராளமாகக் கேட்கப்பட்டன.

மருந்து உற்பத்தி விஷயத்திலும், ரண சிகிச்சைக்கு வேண்டிய கருவிகள் விஷயத்திலும், இந்தியா அதிக அபிவிருத்தி யடைந்திருக்கிறது. இந்தியாவில் செய்யப்படும் அநேகவித மருந்துகளும், இன்னும் அநேகவித ஆஸ்பத்திரி சாமான்களும் வேண்டு மென கிழக்குத் தொகுதி 'சப்ளை' சபை கேட்டிருக் கிறது. தோல் விஷயமாகப் பார்த்தால், கையுறை கள், கால் ஜோடுகள் முதலியன கேட்கப்பட்டிருக் கின்றன. இன்னும் மரவகைகளுக்கும் ஏதேஷ்ட மாக ஆர்டர் வந்தன.

இதைத் தவிர பலவிதமான சாமான்கள் அனுப் பும்படி இந்தியா கேட்டுக்கொள்ளப்பட்டது. அவை என்னென்ன என்பது சொல்லிமுடியாது. சில வற்றை மட்டும் இங்கு குறிப்பிடுவோம். பேனுக்

கத்திகள், படுக்கைகள், நாற்காலிகள், எண்ணெய் வகைகள், மேஜோடு கயிறுகள், பாய்கள் சாக்கட்டிகள் ஏராளமாக 'சப்ளை' செய்யும்படி இந்தியாவுக்கு 'ஆர்டர்'கள் அனுப்பப்பட்டிருக்கின்றன.

## 1 வாரத்தில் 1½ கோடிக்கு மேல் 'ஆர்டர்'

இந்த நவம்பர் மாதம் இரண்டாவது வாரத்தில் ரயில்வே சாமான்களுக்காகவும், மற்ற எஞ்சினீரிங் சாமான்களுக்காகவும் கிட்டதட்ட ஒரு கோடியே அறுபத்து மூன்று லட்ச ரூபாய்க்கு இந்திய 'சப்ளை' இலாகா 'ஆர்டர்' கொடுத்தது. 'ஆர்டர்' கொடுக்கப்பட்ட சாமான்களாவன :—

சண்டவாளங்கள், தண்டவாளங்களை இணைக்கும் 'பிஷ்' பிளேட்டுகள், 'பிஷ்' போல்டுகள், கவ்வும் ஆணிகள், ஸ்லீப்பர் கட்டைகள், ஆணிகள், 'வாஷர்'கள், மரையாணிகள், வலைகள் முதலியன.

இந்த சாமான்களில் பெரும்பான்மை மத்தியக் கிழக்கிலும், சமீபக் கிழக்கிலும் உள்ள தற்காப்புப் படைகளுக்கு அனுப்பப்படும்.

## யந்திரக் கருவிகள் செய்தல்

இந்தியாவில் யந்திரக் கருவிகள் செய்வது விஷயமாகத் திருப்திகரமான அபிவிருத்தி ஏற்பட்டு வருகிறது. சிறிய மரை யந்திரங்களும், தொளை யந்திரங்களும் இப்பொழுது இங்கேயே செய்யப்படுகின்றன. இனிமேல் 'ஆர்டினன்ஸ் சர்விஸ்'களுக்கு வேண்டியவைகளை இந்தியாவில் உற்பத்தி செய்யப்படும் பொருள்களைக் கொண்டே பூர்த்தி செய்ய முடியும்.

தகடடிப்பது, கம்பி இழுப்பது, முதலிய வேலைகளுக்கு வேண்டிய பல வகையான சிறு யந்திரங்கள் செய்து கொடுக்கக்கூடிய கம்பெனியொன்று கிடைத்திருக்கிறது. இந்த யந்திரங்கள் பலவற்றிற்கு முன்னமேயே 'ஆர்டர்' கொடுக்கப்பட்டிருக்கிறது. தலைமை எஞ்சினியர் காரியாலயத்திலிருந்து வந்துள்ள மாதிரியைப் போலவே குழையடிக்கும் 'விக்டாலிக்' யந்திரங்கள், சிலவற்றை இந்தியாவில் செய்வதற்கும் முயற்சி நடந்து வருகிறது.

ஒரு புது மாதிரியான காப்ஸ்டன் இழைப்பு யந்திரத்தை உள்நாட்டுக் கம்பெனியொன்று தயாரித்திருக்கிறது. ஆயுத உற்பத்தி சாலை யொன்றில் அதைப் பரிசோதித்துப் பார்த்ததில் சில சில்லறை மாறுதல் செய்து விட்டால் இது திருப்திகரமாய்ப் போய்விடுமென்று தெரியவந்தது. இன்னொரு புது மாதிரியான காப்ஸ்டன் இழைப்பு யந்திரம் செய்வது பற்றியும் பேச்சு வார்த்தை நடந்து வருகிறது. இதுவும் திருப்திகரமாகவே உற்பத்தி செய்யப்படுமென்று எதிர்பார்க்கப்படுகிறது.

## துருப்புகளுக்குச் 'சிகரெட்டு'கள்

யுத்தம் ஆரம்பித்ததிலிருந்து இதுவரை எத்தனையோ கோடி 'சிகரெட்டு'கள் இந்தியாவிலிருந்து துருப்புகளுக்கு அனுப்பப்பட்டிருக்கின்றன. இப்பொழுது 'சப்ளை' இலாகாவுக்குக் கடைசியாக வந்த 'ஆர்டரில்' பிரிட்டிஷ் துருப்புகளுக்காகவும், இந்தியத் துருப்புகளுக்காகவும் 118 கோடியே 20 லட்சம் 'சிகரெட்டு'கள் கேட்கப்பட்டிருக்கின்றன. இந்தியா முழுவதும் உள்ள 'சிகரெட்' உற்பத்திகாரர்களிடம் இந்த எண்ணிக்கை சிகரெட் உற்பத்தி செய்து கொடுக்கும்படி கேட்கப்பட்டிருக்கிறது. இந்தியாவில் சிகரெட் உற்பத்திச்சாலைகள் ஏதேஷ்டமாக இருக்கின்றன.

கார்க்குக்குப் பதிலாக, கழிவுச் சணலைக் கொண்டு செய்யப்படும் ஒரு புதுச்சரக்கு கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. இதைப் பெருத்த அளவில் உற்பத்தி செய்யும் வேலை கல்கத்தாவில் ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது. மருத்துவ அதிகாரிகளும் பிரதம எஞ்ஜினியரும் இச்சரக்கின் மாதிரிகள் கேட்டிருப்பதாகத் தெரிகிறது.

## தக்கை தொப்பிகள்

இதற்குமுன் கொடுத்துள்ள ஆர்டர் போக, மேற்கொண்டு ஏராளமாய்த் தக்கைத் தொப்பிகள் (ஹாட்டுகள்) 'சப்ளை' செய்வதற்கு 'சப்ளை' இலாகா சமீபத்தில் ஆர்டர் கொடுத்திருக்கிறது. இந்தத் தொப்பிகள் செய்வதற்குவேண்டிய கனமில்லாத 'காக்கி ட்ரில்' கிடைப்பதற்கு பம்பாயிலுள்ள பருத்தி ஜவுளிகள் சம்பந்தமான நிர்வாக சபை ஏற்பாடு செய்துவருகிறது. இன்னம் மேற்கொண்டு ஆர்டர் கொடுக்கும் விஷயமாய் ஆலோசனை நடந்து வருகிறது.

## இந்தியாவில் 'பாரசூட்'

இந்தியாவில் 'பாரசூட்' உற்பத்தி விஷயமாகத் திருப்திகரமான அபிவிருத்தி ஏற்பட்டிருக்கிறது. 'பாரசூட்' என்றால் விமான விரிப்புக் குடை என்று பொருள். இதன் உதவியினால் பறக்கும் ஆகாய விமானத்திலிருந்து குதித்து கீழே இறங்கிவிடலாம்.

ஈரானில் பட்டுப் பூச்சிக் கூடுகளிலிருந்து காஷ்மீர் அரசாங்கத்தார் செய்யும் பட்டு நூலிலிருந்து 'பாரசூட்'டுக்கு வேண்டிய பட்டுத் துணி உற்பத்தி வேலை செய்ய ஆரம்பிக்கப்பட்டு விட்டது. இன்னும் 'பாரசூட்'டுக்கு வேண்டிய பாக்கி துணி வகைகளுக்கு 'ஆர்டர்'கள் கொடுக்கப்பட்டுள்ளன. பட்டிலிருந்து துணி, கயிறு, நாடா, நூல் ஆகிய இவை செய்ய ஆரம்பிக்கப்பட்டுவிட்டன. பிரிட்டிஷ் விமானப் படையினர் கொண்டுள்ள விதிகளின்படி பரீக்ஷிக்கப்பட்ட பிறகு, அநேக மாதிரிகள் திருப்திகரமானவை என்று ஒப்புக்கொள்ளப்பட்டன.

கணிதக் கருவி காரியாலயத்தில் கண்ணாடி மீதும், பித்தளை மீதும் 'போட்டோ' வேலை செய்வது சம்பந்தமாக பரீக்ஷார்த்த வேலை நடந்துகொண்டு வருகிறது. இதுவரை கிடைத்த பலன்கள் நம்பிக்கை யூட்டுவனவாயிருக்கின்றன. இது சரியாகச் செய்து முடிக்கப்பட்டதும், இப்பொழுது மெஷின் கொண்டு செதுக்குவதை விட்டுவிட்டு இந்த முறை கைக்கொள்ளப்படும்.

## இந்தியாவில் மர 'சப்ளை'

இந்திய சப்ளை இலாகாவைச் சேர்ந்த மர சம்பந்தமான நிர்வாக சபைக்கு சுமார் 2 கோடியே 89 லட்சம் ரூபாய் மதிப்புடைய மரம் 'சப்ளை' செய்வதற்கான 'ஆர்டர்' ஒன்று கிடைத்திருக்கிறது. அறுத்த மரத்திப்பைகள், சன்னமாய் அறுத்த சட்டங்கள், தந்திக் கம்பங்கள் முதலியவைகள் 'சப்ளை' செய்யும்படி இந்த சபை கேட்கப்பட்டிருக்கிறது. இதுவரை 'சப்ளை' இலாகாவுக்கு மரத்துக்காகக் கிடைத்துள்ள தனி ஆர்டர்களில் இதுவே மிகவும் பெரியதாகும். இதுவரை இந்தியாவுக்கு இவ்வளவு பெரிய ஆர்டர் மரத்துக்காக கிடைத்ததில்லை என்றுகூடச் சொல்லலாம்.

இந்த ஆர்டர் அல்லாமல், ஏற்கெனவே 'சப்ளை' இலாகா மொத்தம் 4 கோடியே 69 லட்சம் ரூபாய்க்கு மேலேயே மரமும் மரச்சாமான்களும் வாங்கியிருக்கிறது.

தற்போது பஞ்சாபில் வியாபாரிகள் வைத்திருக்கும் மரத்தில் விமானங்கட்டுவதற்கு வேண்டிய பலவகை மரங்கள், பெரும்பாலும், கள்ளி வகைகள் இருக்கின்றன. ஆனால் விமானங் கட்டுவதற்கு மிகவும் நேர்த்தியான மரம் வேண்டியிருப்பதால் அந்த மரம் மிகவுங் குறைவாய்த்தான் கிடைக்கிறது. இத்தகைய மரம் அதிகமாய்க் கிடைக்கும்படி செய்வதற்கு ஒரே வழி, காட்டில் மரங்களை வெட்டி வீழ்த்தும்போதே அவைகளிலிருந்து வேண்டியதைத் தேர்ந்தெடுத்துவிடுவது தான். இதை அறுத்துச் சரிப்படுத்துவதெல்லாம் காட்டிலேயே செய்யவேண்டும். இப்படிச் செய்த மரத்தை வழக்கம்போல் நீரில் மிதக்கவிட்டுக்கொண்டு வருவதற்குப் பதிலாகச் சாலைகளில் இழுத்துக்கொண்டு வரவேண்டும்.

விமானங் கட்டுவதற்கு வேண்டிய நீர் ஊறாத ப்ளைவுட் ஒட்டுப் பலகையில் பலவகைகள் ஐக்கிய மாகாணத்திலுள்ள கம்பெனியொன்றில் தயாரிக்கப்பட்டிருக்கின்றன. இந்த மாதிரிகளைக் கடைசியாகப் பரீட்சித்து வருகிறார்கள்.

## தையற்காரர்களுக்கு அதிர்ஷ்டம்

இந்த யுத்தம் ஆரம்பித்ததிலிருந்து இதுவரை இந்தியாவில் துருப்புகளுக்காக உற்பத்தியான ஆடைகளின் எண்ணிக்கை சென்ற யுத்தம் முழுவதும் உற்பத்தியானதைவிட அதிகரித்திருக்கிறது. 1917-ம் ஆண்டு ஜூன் மாதம், அதாவது சென்ற யுத்தம் ஆரம்பித்து 35 மாதகாலத்தில் சுமார் 20 லட்சம்

ஆடைகளை உற்பத்தி செய்யப்பட்டன. ஆனால் 1941-ம் ௵ செப்டெம்பர் ௴, அதாவது இந்த யுத்தம் ஆரம்பித்த 24 மாதகாலத்தில் 70 லட்சம் ஆடைகளுக்குமேல் உற்பத்தி செய்யப்பட்டுவிட்டன.

1939-ம் ௵ செப்டெம்பர் ௴ யுத்தம் ஆரம்பித்ததிலிருந்து உற்பத்தியான ஆடை எண்ணிக்கை பின் வருமாறு :—

| | | |
|---|---|---|
| 1939-ம் ௵ செப்டெம்பர் ௴ முதல் தேதியிலிருந்து 1940-ம் ௵ மார்ச்சு ௴ முடிய .. | 20,00,000 | ஆடைகள். |
| 1940-ம் ௵ எப்ரல் ௴ முதல் தேதியிலிருந்து 1941-ம் ௵ மார்ச்சு ௴ முடிய .. .. .. | 1,90,00,000 | ஆடைகள். |
| 1941-ம் ௵ எப்ரல் ௴ முதல் தேதியிலிருந்து 1941-ம் ௵ செப்டெம்பர் ௴ முடிய .. . | 3,30,00,000 | ஆடைகள். |
| ஆக 24 மாதங்களுக்கு இந்த யுத்தத்தில் மொத்தத் தொகை .. | 5,40,00,000 | ஆடைகள். |
| சென்ற யுத்தத்தில் 52 மாதங்களுக்கு ஆன மொத்தத் தொகை . | 4,20,00,000 | ஆடைகள். |

யுத்தம் ஆரம்பித்ததிலிருந்து சர்க்கார் பட்டறைகள் துணிகளை வேண்டிய அளவுக்குச் கத்தரித்து, அவற்றையும், நூல், பொத்தான் முதலியவைகளையும் கண்டிராக்டர்களிடம் ஒப்படைத்து விடுகிறது. அவர்கள் ஆடைகளைத் தைத்துக் கொடுக்கிறார்கள். இம்மாதிரிச் செய்வது சிக்கனமாக இருப்பதுடன், வேலையும் விரைவில் முடிகிறது. ஆடை சம்பந்தமான நிர்வாக சபை மாதம் இப்படி 70 லட்சம் ஆடைகள் தயார்செய்து வருகிறது. யுத்த ஆரம்பத்தில் மாதம் 1 லட்சத்து 20 ஆயிரம் ஆடைகளாக இருந்தது இப்பொழுது இவ்வளவு உயர்ந்திருக்கிறது.

'சப்ளை' இலாகாவின் கீழ் இப்பொழுது 11 ஆடைப் பட்டறைகள் இருக்கின்றன. இந்தியா முழுவதுக்கும் 80 கம்பெனிகளுக்கு காண்டிராக்ட விடப்பட்டிருக்கிறது. அவர்கள் 65 விதமான ஆடைகள் செய்து கொடுக்கின்றன. இப்பொழுது உள்ள திட்டத்தினால் தையற்காரர்களுக்கு அதிர்ஷ்டம் என்றுதான் கூறவேண்டும். சுமார் 55,000 தையற்காரர்களுக்கு கண்டிராக்டரிடமிருந்து ஒழுங்காக சம்பளம் வருவதுடன், கண்டிராக்டர் அவர்களுக்கு நல்ல சம்பளமும் கொடுக்கமுடிகிறது.

## தென் இந்தியாவுக்கு ரூ. 10 கோடி 'ஆர்டர்'

யுத்தத்தின் முதல் இரண்டு வருஷங்களுக்குள் தென் இந்தியா வட்டாரத்தில், அதாவது சென்னை மாகாணம், திருவாங்கூர் சமஸ்தானம், கொச்சி சமஸ்தானம், மைசூர் சமஸ்தானம், ஆகிய இவை எல்லாவற்றிலும் சேர்ந்து, பத்து கோடி ரூபாய்க்கு யுத்த 'ஆர்டர்'கள் கொடுக்கப்பட்டன.

இப்படிக் கொடுக்கப்பட்ட ஆர்டர்களில் சில முக்கியமான இனங்கள் துணி வகைகள், மரம், ஓடு, இஞ்சினீரிங் சாமான்கள், தளவாட சாமான்கள், விஞ்ஞானக் கருவிகள், திராவகங்கள், மருந்து வகைகள், தோல், தோல் சாமான்கள், உணவு வகைகள் ஆகியவையாகும்.

யுத்த தேவைக்காக மாகாணத்தில் கிடைக்கக்கூடிய எல்லாப் பொருள்களும், மேலும் மேலும் உபயோகப்படுத்தப்படுகின்றன. அவ்வப்போது தேவைகளைப் பூர்த்தி செய்ய புதிது புதிதாக ஆட்கள் முன்னுக்கு வந்துகொண்டிருக்கிறார்கள். இப்பொழுது உள்ள உற்பத்தியை அதிகரிப்பதற்காக அவர்களுக்குத் தேவையான உதவியும், உற்சாகமும் அளிக்கப்படுகிறது. 1940-ம் ௵ எப்ரல் ௴ 1௳யிலிருந்து சப்ளை இலாகா கொள்வினைப் பகுதியால் சென்னை மாகாணத்தில் ரிஜிஸ்ட்டர் செய்யப்பட்ட கம்பெனிகளின் எண்ணிக்கை 208-லிருந்து 293 ஆக உயர்ந்துவிட்டது.

## தளவாட உற்பத்தி

இந்தியாவில் தளவாட உற்பத்தி சக்தியை அதிகரிப்பதற்காக செய்யப்பட்டு வரும் பட்டறை விஸ்தரிப்பும், புதிய திட்டங்களும் வெகுவாக அபிவிருத்தியடைந்து கொண்டுவருகின்றன. ஒரு உலோக, எஃகுப்பட்டறை நவீனமயமாக்கப்பட்டது. அப்பட்டறை நவம்பர் மாதமே வேலை செய்யத் தொடங்கிவிட்டது. இன்னும் பாக்கித் திட்டங்கள் சம்பந்தமாகவும் வேலை நடந்து கொண்டு வருகிறது. குறிப்பாக காற்று வெடி குண்டுகள் செய்வது விஷயமாகவும், இரும்பல்லாத உலோக வேலை விஸ்தரிப்பு சம்பந்தமாகவும், வேலை நடந்து வருகிறது.

நவீன மயமாக்கும் திட்டங்கள் சம்பந்தமாக ஒரு வெடி மருந்து பட்டறையிலும் துப்பாக்கி, குண்டு உறை பட்டறை ஒன்றிலும் அதிகமான வேலை நடந்திருக்கிறது.

கீழ்த்தொகுதி திட்டங்களும் நிறைவேறிக்கொண்டிருக்கின்றன. துப்பாக்கிகள், பீரங்கிகள், சனியன்கள், முக்காலிகள், ப்யூஸ்கள், துப்பாக்கி மருந்துகள் ஆகியவை உற்பத்தி விஷயத்தில் மிக்க அபிவிருத்தி ஏற்பட்டிருக்கிறது. சில விஷயங்களில் போட்ட திட்டத்துக்கு மேலேயே அபிவிருத்தி காணும் போல் தோன்றுகிறது.

## 'சப்ளை' சாமான்களில் சில

எஞ்சினீரிங் பகுதியிலும் இந்தியா, கீழ்த்தொகுதி நாடுகள் இவை பாதுகாப்புக்குத் தேவையான சாமான்கள் துரிதமாக உற்பத்தி செய்துகொண்டு வரப்படுகின்றன. சமீபத்தில் சில வாரங்களில் கூடாரங்கள், பாரம் தூக்கிகள், பெட்ரோல், தண்ணீர் முதலியவை வைத்துக்கொள்ள டாங்குகள், பாலம் தாங்கிகள், அகழ் பாதுகாப்புகள், எஃகுத்தொப்பிகள், கால் பம்புகள், ரயில்வே சாமான்கள், ஆகிய இவை அதிகமாக உற்பத்தி செய்யப்பட்டிருக்கின்றன. இதைத் தவிர, கவசம் பூண்ட வண்டிகள், லாரிகள், பீரங்கி வண்டிகள் ஆகிய இவற்றில் உற்பத்தியும் அதிகரித்துக்கொண்டு வருகிறது.

இன்னும் டிராலர்கள், கடல் வெடி வாரிகள், போன்ற சமுத்திரத்துக்கு வேண்டியவற்றின் உற்பத்தியும் எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கின்றன. மேற்கொண்டு செய்வதற்கும் திட்டங்கள் போடப்பட்டுள்ளன.

'பாரசூட்' என்று சொல்லப்படும், விமானக் குடை உற்பத்தியும் துரிதமாக நடந்து வருகின்றது. இதற்குவேண்டிய பட்டுத்துணியும், ஸ்டாடிகூட் என்று சொல்லப்படும் சாமான் இறக்க உபயோகப்படும் விமானக்குடைக்கு வேண்டிய எல்லா உபகரணங்களும் செய்யப்பட்டு வருகின்றன.

## துணி, உணவு வகைகள்.

துணி வகைகளில் விஷ வாயுச் சீலைகளின் உற்பத்தி மிகவும் அதிகரித்திருக்கிறது. இதற்கு வேண்டிய முக்கிய பொருளைத் தயார் செய்துகொடுக்க அநேக கம்பெனிகள் ஒப்புக்கொண்டிருக்கின்றன. இதிலிருந்து விஷ வாயுச்சீலைகள் செய்துகொடுக்க வேறு கம்பெனிகள் ஒப்புக்கொண்டிருக்கின்றன.

இந்தியாவில் உணவு வகைகள் விஷயத்திலும், புதுப்புது வகைகள் செய்து வரப்படுகின்றன. உருளைக் கிழங்கு வற்றலை முக்கியமாகக் குறிப்பிடவேண்டும். அநேக கம்பெனிகள் இவற்றைச் செய்துகொடுக்கின்றன. இன்னும் பானகம், ஊறுகாய், பழச்சாறு, காடி, குழம்புப் பொடி, பிஸ்கோத்து, சிகரெட், புகையிலை, பதப்படுத்தப்பட்ட தக்காளிப்பழம், கோழிக் குஞ்சு ரசம் ஆகிய இவையும் இப்பொழுது மிகவும் தேவையாயிருக்கின்றன.

குறிப்பு.—யுத்த சஞ்சிகையின் பிரதிகளைத் தயவுசெய்து ஒன்றன்பின் ஒன்றாக விடாமல் சேர்த்துவரவும்.
[சென்னை இன்பர்மேஷன் ஆபீஸர் அவர்களால் அன்புடன் அளிக்கப்பட்டது.]

MADRAS : PRINTED AND PUBLISHED BY THE SUPERINTENDENT, GOVERNMENT PRESS.